

திருவள்ளூர் முன்னாள் மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான கும்மிடிப்பூண்டி கி.வேணுவின் படத்திறப்பு விழா பன்பாக்கம் கிராமத்தில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, தலைமையில் ஒன்றிய செயலாளர் கி.வே.ஆனந்தகுமார் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ் பாரதி ஆகியோர் திருவுருவப் படத்தை திறந்து வைத்து இரங்கலுரையாற்றினர். அருகில் கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, மாவட்ட செயலாளர்கள் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி. ஐ.பரந்தாமன், மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி உள்ளிட்ட குடும்பத்தினர் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



காஞ்சிபுரம் மாநகராட்சியில் மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் தலைமையில் ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கத்தை மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் சி.வி.எம்.பி . எழிலரசன் எம்.எல்.ஏ., சன் பிராண்ட் ஆறுமுகம், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ். சுகுமார், ஏ.எஸ். முத்து செல்வம், பகுதி செயலாளர்கள் எஸ். சந்துரு, கே.திலகர், அ. தசரதன், சு வெங்கடேசன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அ. யுவராஜ் மற்றும் ஒன்றிய செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

### திண்டுக்கல் மாவட்டம்

# ஆத்தூர் தொகுதியில் கழக நிர்வாகிகளுக்கு அன்பளிப்பு!

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி வழங்கினார்!

திண்டுக்கல், நவ.11-

ஆத்தூர் தொகுதியில் திமுக நிர்வாகிகள், பேரூர்கழகம், கிளைக்கழக நிர்வாகிகளுக்கு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தீபாவளி வாழ்த்துக்களுடன் அன்பளிப்பு வழங்கியதால் திமுகவினர் உற்சாகம் அடைந்துள்ளனர்.

ஆத்தூர் தொகுதியில் தொடர்ந்து திமுக நிர்வாகிகளின் பாதுகாவலராக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உள்ளார் என திமுக நிர்வாகிகள் பெருமிதமாக கூறினர்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் 1989ம் ஆண்டு முதல் இன்று வரை 34 ஆண்டுகளாக தொடர்ந்து ஒரே தொகுதியில் போட்டியிட்டு மாபெரும் வெற்றி பெற்றவர் ஐ.பெரியசாமி இவர் திமுகவின் துணைப் பொதுச்செயலாளராகவும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சராகவும் பதவியில் உள்ளார். ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், திமுக தொண்டர்களை பாதுகாப்பதில் ஐ. பெரியசாமி அவர்கள் முன்னோடியாக இருப்பார். தீபாவளி, பொங்கல் பண்டிகையின் போது திமுக நிர்வாகிகளை தனது இல்லத்திற்கு அழைத்து அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து அன்பளிப்பு வழங்குவது வழக்கம். இவ்வருடம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆத்தூர் கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஒன்றியகழக செயலாளர்கள், நிர்வாகிகள், பேரூர்கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கிளைக்கழக நிர்வாகிகளுக்கு தீபாவளி வாழ்த்துக்களுடன் அன்பளிப்பு வழங்கி அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்.

இதுபோல ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட 104 கிளைக்கழக நிர்வாகிகளுக்கும், கன்னிவாடி மற்றும் ஸ்ரீராமபுரம் பேரூர்கழக நிர்வாகி களுக்கும் தீபாவளி வாழ்த்துக்களுடன் அன்பளிப்பு வழங்கி அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். ரெட்டியார் சத்திரம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட வடக்கு ஒன்றிய நிர்வாகிகள், ஊராட்சியில் உள்ள 136 கிளைக்கழக செயலாளர் மற்றும் நிர்வாகிகளுக்கு தீபாவளி வாழ்த்துக்களுடன் அன்பளிப்பு வழங்கி அவர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். தொடர்ந்து 34 வருடங்களாக தங்களுக்கு வாழ்த்துக்களுடன் அன்பளிப்பும் வழங்கி தங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வண்ணம் கிளைக் கழக நிர்வாகிகள் கூறுகையில் எப்போதும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் எங்களை நேரில் அழைத்து வாழ்த்து சொல்லி மகிழ்ச்சியுடன் பண்டிகையை கொண்டாடுங்கள் என்று வாழ்த்து சொல்வார். இவ்வருடம் மருத்துவ சிகிச்சைக்கு பின் ஓய்வு பெற்று வரும் நிலையில் கூட ஆத்தூர் தொகுதி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களை மறக்காமல் எங்களுக்கு தீபாவளி வாழ்த்துக்களுடன் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் அன்பளிப்பு வழங்கியது மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்றனர். அதனால் தான் நாங்கள் எங்கள் தொகுதியின் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை தென்பாண்டி சிங்கம், கூப்பிட்ட குரலுக்கு ஓடிவருபவர் என பெருமையாக சொல்வதில் தனி மகிழ்ச்சி கிடைக்கிறது என்றனர்.

### காங்கிரஸ் ஆட்சிக்கு வருவதைத் தடுக்க

# அமலாக்கத்துறை போன்ற விசாரணை அமைப்புகளை பா.ஜ.க. பயன்படுத்துகிறது!

## அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

வைகுந்த்பூர், நவ. 11-

சத்தீஸ்கர் மாநிலம், வைகுந்த்பூர் சட்டமன்றத் தொகுதியில் நடந்த பிரசார கூட்டத்தில் பேசிய அவர், காங்கிரஸ் ஏழைகளுக்கானது என்றார். ஆனால், பா.ஜ.க.வோ அதானி மற்றும் பணக்காரர்களுக்காக பாடுபடும் கட்சி என்று குறிப்பிட்டார்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வருவதை தடுக்க அமலாக்கத்துறை, சி.பி.ஐ., வருமான வரித்துறையை பா.ஜ.க. பயன்படுத்துவதாக குற்றம் சாட்டிய கார்கே, மோடியின் நட்சத்திர பிரச்சாரக்



காரர்களாக விசாரணை அமைப்புகள் இருப்பதாகவும் விமர்சித்துள்ளார்.

5 மாநில தேர்தல் முடிவுகள் நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமானது என்றும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

### ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி

# தாடிக்கொம்பு - கன்னிவாடி பேரூராட்சிகளில் 100 நாள் வேலைத்திட்டம்!

## முதல்வர் - அமைச்சருக்கு பொதுமக்கள் பாராட்டு!

திண்டுக்கல், நவ.11-

பேரூராட்சிகளில் தமிழ்நாடு அரசு சார்பாக நகர்புற வேலை 100நாள் வேலை திட்டத்தை செயல்படுத்தி வரும் தமிழக முதல்வர், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருக்கு கிராம மக்கள், காங்கிரஸ் கட்சியினர், சமூக ஆர்வலர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர். ஆத்தூர் தொகுதியில் தாடிக்கொம்பு, கன்னிவாடி, பேரூராட்சிகளில் தமிழக அரசு சார்பாக தமிழ்நாடு நகர்புற வேலை திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்தியா முழுவதும் காங்கிரஸ் ஆட்சியின் போது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் (100நாள் வேலை திட்டம்) செயல்படுத்தப்பட்டது. அதன் பின்பு ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. அரசு 100நாள் வேலை திட்டத்தை முடக்கும் வகையில் செயல்பட்டது. தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நாயகன் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அரசு அமைந்தவுடன் 100நாள் வேலை திட்டம் புத்துயிர் பெற்றது.

தமிழக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமியிடம் கடந்த 2021 சட்டமன்ற தேர்தலின் போது பேரூராட்சி பகுதியை சேர்ந்த பொதுமக்கள் தங்கள் பேரூராட்சி அருகே உள்ள கிராம ஊராட்சிகளில் 100 நாள் வேலை திட்டத்தை தமிழக அரசு சிறப்பாக செயல்படுத்தி வருவதால் அங்குள்ள மக்கள் வேலை வாய்ப்பு பெருவதாகவும் தங்களுக்கும் (பேரூராட்சி பகுதி) 100நாள் வேலை திட்டம் போல் நகர்புற வேலை திட்டம் வேண்டுமென கோரிக்கைவிடுத்தனர்.

தேர்தல் பரப்புரையின் போது கன்னிவாடி பேரூராட்சி பகுதியில் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பொதுமக்களின் கோரிக்கையை தமிழக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்று செயல்படுத்துவதாக உறுதியளித்தார். அதன்படி சென்றவருடம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தாடிக்கொம்பு பேரூராட்சியிலும் இந்த வருடம் (2023) கன்னிவாடி பேரூராட்சி பகுதியிலும் நகர்புற வேலை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்கு பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

இதுகுறித்து ரெட்டியார்சத்திரம் ஒன்றிய திமுக பெருந்தலைவரும், ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளருமான ப.க.சிவகுருசாமி கூறுகையில் மத்தியில் ஆளும் ஒன்றிய அரசு 100நாள் வேலை திட்டத்தை முடக்க நினைத்து பல்வேறு குறுக்கீடுகளை ஊராட்சிகளில் செய்து வருகிறது. இதற்கு தமிழக ஆளுநரும் உடந்தையாக செயல்பட்டு வருகிறார். எங்கள் ஊராட்சிஒன்றிய குழு கூட்டத்தில் இதுசம்மந்தமாக ஆளுநரை கண்டித்து தீர்மானம் நிறைவேற்றி யுள்ளோம்.

திராவிட மாடல் ஆட்சி நாயகன் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கால ஆட்சியில் பேரூராட்சி பகுதிகளிலும் 100 நாள் வேலை திட்டம் போல் நகர்புற வேலை திட்டம் செயல்படுத்தி வருவது பாராட்டுக்குரியது என்றதோடு அதற்கு உறுதுணையாக இருந்த தமிழக முதல்வருக்கும், திமுக மாநில துணைப்பொதுச்செயலாளரும், ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமிக்கும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் பொதுமக்கள் சார்பாக மனதார பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

இதுபோல ரெட்டியார்சத்திரம் வட்டார காங்கிரஸ் கமிட்டி தலைவர் முருகானந்தம் கூறுகையில் தமிழக முதல்வர் ஏழை எளிய மக்களின் நலன் கருதி பேரூராட்சி பகுதிகளிலும், நகர்புற வேலை திட்டத்தை உருவாக்கி வருவது பாராட்டுக்குரியது என்றதோடு தொகுதி மக்களின் செல்லப்பிள்ளையாக இருக்கும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கும் காங்கிரஸ் கட்சி சார்பாக மனதார பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

### பெரம்பலூர் மாவட்ட மாணவர் அணி சார்பில் மாவட்ட

# பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி!

## குன்னம் இராஜேந்திரன் – எம்.பிரபாகரன் பங்கேற்பு!

பெரம்பலூர், நவ.11-

பெரம்பலூர் பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், தி.மு.க. மாவட்ட மாணவர் அணி சார்பில் மாவட்ட அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பேச்சுப்போட்டி, கட்டுரை போட்டி நடைபெற்றது. மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தங்க.கமல் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பா. ரினோபாஸ்டின் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் தமிழ்வேந்தன், கிருஷ்ணன் கிருஷ்ணாஇள, இளையராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாணவரணி மாநில துணைச் செயலாளர் ஆனந்த் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார், இதில்

மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபா கரன், ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள், நிகழ்ச்சி யில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு, கலைஞர் வாழ்க்கை வரலாறு மற்றும் அவரது அரசியல் பயணம் குறித்து பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டி நடைபெற்றது, இதில் கல்லூரி பேராசிரியர்கள் நடுவர்களாக செயல்பட்டு சிறந்த பேச்சு மட்டும் கட்டுரை போட்டி வெற்றியாளர்களை தேர்வு செய்தனர்.

போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு பரிசுகள் கேடயமும் வழங்கப்பட்டது. மேலும், போட்டியில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டன. பரிசுகளை மாவட்ட கழக செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன்,பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியின் போது மாநில நிர்வாகிகள் பா. துரைசாமி, டாக்டர் செ. வல்லபன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர் , சன்.சம்பத், ஒன்றிய செயலாளர்கள் எம். ராஜ்குமார், வீ. ஜெகதீசன், எஸ். நல்லதம்பி, தி.மதியழகன், சி. ராஜேந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் து. ஹரி பாஸ்கர், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க. ரமேஷ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி. ராசா, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, காலை இலக்கிய பேரவை அமைப்பாளர் கே.எம்.ஏ.சுந்தரராசு, அயலக அணி அமைப்பாளர் எ.ரசூல் அகமது, சுற்றுச்சூழ ணி அமைப்பாளர் அருண்குமார், முன்னாள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே. ஜி. மாரிக்கண்ணன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அப்துல் கரீம், மற்றும் நிர்வாகிகள் எளம்பலூர் அறிவழகன், அஜித் மற்றும் ஹாலித், மோகன பிரபாகரன் உள்ளிட்ட நிர்வாகிகள் உறுப்பி னர்கள் பலர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சியின் இறுதியாக மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ராகவி ரவிக்குமார் நன்றியுரை யாற்றினார்.

### மானாமதுரையில்

# ரூ.10 லட்சம் செலவில் வடிகால் சீரமைப்புப் பணிகள்!

## நகர் மன்றத் தலைவர் பார்வையிட்டார்

சிவகங்கை, நவ. 11-

சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை நகராட்சி உள்ளது. இதில் 27வார்டுகள் உள்ளது. கடந்த சில தினங்களாக மானாமதுரை மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் தொடர்ந்து மழைபெய்து வருகிறது. இதனால் மானாமதுரை நகரில் தண்ணீர் தேங்காமல் கண்மாய்களுக்கு செல்வதற்காக நகராட்சி பொது நிதியிலிருந்து ருபாய் 10லட்சத்தினை வடிகால் சீரமைப்பிற்காக ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. இந்த பொது நிதியில் இருந்து 27வார்டுகளிலும் உள்ள வடிகால்கள் நகராட்சி பணியாளர்கள் மற்றும் ஜேசிபி எந்திரங்கள் மூலமாக சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

அந்த பணிகளை நகர் மன்ற தலைவர் எஸ்.மாரியப்பன்கென்னடி, பார்வையிட்டார்.

அவருடன் துணைத் தலைவர் பாலசுந்தரம் , கவுன்சிலர் புருசோத்தமன், ஆணையாளர் ரங்கநாயகி, பொறியாளர் முத்துக்குமார், நகரசெயலாளர் க.பொன்னுச் சாமி உட்பட அலுவலர்கள் சென்றிருந்தார்கள். வடிகால் சீரமைப்பு பணிகளை விரைவில் முடித்திடு மாறு அலுவலர்களிடம் அவர் கூறினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டம் மாநகரம் சூரம்பட்டி பகுதி 31வது வட்டக் கழகம், ஈரோடு தெற்கு மாவட்ட, மாநகர மருத்துவ அணி மற்றும் நந்தா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்பில் சூரம்பட்டிவலசு அம்மன் திருமண மண்டபத்தில் பகுதி கழக செயலாளர் வில்லரசம்பட்டி முருகேசன் தலைமையில் பல்வேறு நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் மாபெரும் மருத்துவ முகாமினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், உள்ளிட்ட மண்டல குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநில ,மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி

**நவம்பர் 11 (1989)**



தென்னாற்காடு மாவட்டக் கழகச் செயலாளராகவும் – தமிழக சட்டப்பேரவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் தன்மான இயக்கத்தில் ஈடுபாடு உடையவராகி மாணவப் பருவத்தில் சுயமரியாதை கொள்கை பரப்பும் பணியில் ஈடுபட்டவர்.

அறிஞர் அண்ணா அவர்களிடம் பற்று கொண்டு தி.மு.க. துவக்கியநாள் முதல் அயராது பணியாற்றிய அஞ்சாநெஞ்சன்.

“கழகத்தின் வீரவேங்கை, சுயமரியாதைச்சுடர், மாவட்ட தளகர்த்தர், கழக உடன்பிறப்புகளுக்கு அரண்போல் விளங்கிய அடலேறு” என தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**